



- வாழ்வோம்

# போற்றத்தக்கதா தேவதாசி முறை?

கடந்த செப்டம்பர் 19 -ஆம் தேதி, சென்னை கவிக்கோ அரங்கில், ‘தேவதாசிகள்’ பற்றிய ஆய்வரங்கம் நடைபெற்றது. அதில், ‘தேவதாசி முறையை ஒழித்ததே தவறு’ என்ற நோக்கில் பலர் கருத்துகளை முன்வைத்துள்ளனர். குறிப்பாக, எழுத்தாளர் அ.வெண்ணிலா, “1500 ஆண்டுகள் சிறப்புடன் இருந்த அமைப்பை அழித்துவிட்டோம். தேவதாசிகள் மிக உயர்ந்த உரிமை வாழ்க்கை நடத்தினர். கோயில்களில் அவர்களுக்கு மிகுந்த மரியாதை வழங்கப்பட்டது” என்று பேசியுள்ளார்.

அதேபோல, எழுத்தாளர் ஜெயமோகன் பேசும்போது, “இந்தியாவில் சங்ககாலம் முதல் நடைமுறையில் இருந்த ஒழுக்கத்தில், ‘கிறிஸ்தவ மிஷனரிகள்’ குறுக்கிட்டுவிட்டார்கள். பிறப்பு சார்ந்த தொழில், எல்லாவற்றிலும் குழந்தைகள் கொஞ்சம் வன்முறையோடுதான் பழக்கப்படுத்தப் படுவார்கள்” என்று கூறியுள்ளார். இப்படி அந்த ஆய்வரங்கில் பேசிய பலரும் ‘தேவதாசி முறை’யை நியாயப் படுத்தும் வகையில், பல விதமான கருத்துகளை அள்ளித் தெளித்துள்ளனர்.

ஆனால், ‘தாசிகளின் மோசவலை’ என்ற நூலை எழுதிய மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் குறித்தோ, அவரைப் பற்றி ஆய்வாளர் ஜீவசுந்தரி எழுதிய ‘மூவலூர் ராமாமிர்தம் அவர்களின் வாழ்வும் பணியும்’ நூல் குறித்தோ, தேவதாசி ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டுவந்த டாக்டர் முத்துலட்சுமி குறித்தோ, இந்த ஆய்வரங்கில் பேசப்படவில்லை. இது மிகக் கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில், ‘போற்றத்தக்கதா தேவதாசி முறை?’ என்ற சிறப்புக் கருத்தரங்கம், வருகிற சனிக்கிழமை (26.09.2026) பெரியார் திடலில் உள்ள மணியம்மையார் அரங்கில் நடைபெற உள்ளது. புதிய குரல், திராவிடர் கழக மகளிர் அணி, திராவிடர் கழக மகளிர் பாசறை சார்பில், மாலை 5 மணிக்கு இந்தக் கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

இன்றைய நவீன யுகத்திலும் ‘தேவதாசி முறை’யை நியாயப்படுத்திப் பேசுகின்ற அவலத்தை உடைத்துப்பேசுவோம். தமிழ்ச் சமூகத்தை நூறாண்டுக்காலம் பின்னோக்கி இழுக்கும் நயவஞ்சகச் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்துவோம்.

# ஃப்ளாஷ்பேக்



## காலத்தால் அழியாத நினைவுகள்!

1983-ஆம் ஆண்டு, அன்றைய கோவை மாவட்டம் உடுமலைப் பேட்டையில், கழகத்தின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் கலந்துகொண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்போது, உடுமலைப்பேட்டை நகர இளைஞர் அணித் துணை அமைப்பாளராக இருந்த நான், தலைவரிடம் தேர்தல் நிதி அளித்தபோது எடுத்த படம். தலைவருடன் அண்ணன்கள் கண்ணப்பன், சி.டி.தண்டபாணி உள்ளிட்ட நிர்வாகிகள் இடம்பெற்றுள்ள இந்தப் படம், காலத்தால் அழியாதது.



வி.என்.ஷாஜகான்

**- வி.என்.ஷாஜகான்,**
**உடுமலைப்பேட்டை, மாவட்ட அமைப்பாளர்,**
**சிறுபான்மை நல உரிமைப் பிரிவு, திருப்பூர் தெற்கு.**

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# அண்ணாவின் இலக்கிய இயக்கம்!



01
பேரறிஞர் பேனா

பேரறிஞர் அண்ணா என்பது வெறும் பெயர் அல்ல. தமிழ்நாட்டின் அரசியல் தன்மையைப் புரட்டிப்போட்ட பெரும் புயல். திரையிலும் இணையத்திலும் வைரலாகிவிட்டால் தலைவராகி விடலாம் என்ற காலச்சூழலில், இணையம் என்ற வார்த்தைகூட இல்லாத அந்த காலகட்டத்திலேயே தமிழ் மக்களின் இதயத்தில் இடம்பிடித்தவர் அண்ணா. இன்ஸ்டாகிராமோ, ஃபேஸ்புக்கோ, எக்ஸ் தளமோ இல்லாத அந்தக் காலகட்டத்திலேயே, கோடிக்கணக்கானோரைச் சென்றடைந்து, அவர்களைத் தன்வயப்படுத்தி வைத்திருந்த தன்னிகரற்ற தலைவர்.

அரசியலுக்கு முகம் கொடுத்ததால் மட்டும் அந்த ஈர்ப்பு நிகழ்ந்துவிடவில்லை. இணையத்தைவிட மிக வலிமையான இலக்கியத்திற்கு முகம்கொடுத்து, அந்த இலக்கியத்தின் வழியாகத் தமிழ் மக்களைத் தன் கருத்துகள்மூலம் கட்டிப் போட்டவர் அண்ணா. இணையத்தின் வைரல், ஈசலைப் போல குறுகிய கால ஆயுளைக் கொண்டது. ஆனால் இலக்கியத்தின் ஊடுருவலே ஆயுட்காலத்திற்கும் பிந்தைய இருப்பைக் கொண்டது.

அத்தகைய நிரந்தர இருப்பைக் கொண்ட அண்ணாவின் இலக்கியப் படைப்புகள் யாவும் பேசிப்பேசி தீர்க்க முடியாதது; எழுதி எழுதி முடிக்க முடியாதது. எத்தனை முறை பேசினாலும் எத்தனை முறை எழுதினாலும் அலுப்பு ஏற்படாது; அயற்சியைக் கொடுத்துவிடாது. ஆனால், அண்ணாவின் படைப்புகளில் இலக்கியம் இல்லை.. பிரச்சாரம்தான் இருக்கிறது என்று விமர்சித்தவர்களும் உண்டு. பிரச்சாரத்திற்குப் பயன்படாத இலக்கியத்திற்கு வியாபார நோக்கம்தான் இருக்கும். பிரச்சார இலக்கியங்களுக்குத்தான் கருத்தியல் நோக்கம் இருக்கும். அண்ணாவின் படைப்புகளுக்கு வியாபார நோக்கம் இல்லை. சீர்திருத்த நோக்கம்தான் இருந்தது. வியாபார நோக்கம் இருந்ததில்லை.

அவருடைய நாடகங்கள், நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள்தான் புராண இதிகாசங்களைக் கேட்டு சிலாகித்துப் போயிருந்த தமிழ்ச் சமூகத்தின் மடமைத்தனங்களில் இருந்து விடுவித்து, சீர்திருத்தக் கருத்துகளின் திசைநோக்கி இழுத்து வந்தது. பகுத்தறிவுக் கருத்துகளைப் பேசி, ஆரிய மாயையில் இருந்து விழிப்புகொள்ளச் செய்தது.

நவீனங்களை உள்வாங்கி, வளர்ச்சிப் பாதைக்கு அடித்தளம் அமைத்தது அண்ணாவின் எழுத்துகள்.

குறிப்பாக, தமிழ் இலக்கிய வரலாற்றில் திராவிட இயக்கத்தின் கருத்தியல் அடித்தளத்தை உருவாக்கியவர் அண்ணா. 1942-இல் காஞ்சிபுரத்தில் இருந்து ‘திராவிட நாடு’ வார இதழைத் தொடங்கிய அவர், அதில் சௌமியன், பாரதன் போன்ற புனைபெயர்களில் கட்டுரைகள், கதைகள், விமர்சனங்கள் எழுதினார். அவருடைய எழுத்துகள் அரசியல்ரீதியாக மட்டுமல்ல, இலக்கியரீதியாகவும் தமிழ்நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

‘ஓர் இரவு’, ‘வேலைக்காரி’, ‘சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்’, ‘நீதிதேவன் மயக்கம்’, ‘சொர்க்க வாசல்’, ‘சந்திரோதயம்’, ‘இன்ப ஒளி’, ‘கண்ணாயிரத்தின் உலகம்’, ‘கண்ணீர்த் துளி’ போன்ற அண்ணாவின் புகழ்பெற்ற நாடகங்கள், அவரது சமூக நீதிப் பார்வை யையும், சீர்திருத்தக் கருத்துகளையும் வலுவாக ஓங்கி ஒலித்தன. இவற்றில் பல பின்னாளில் திரைப்படங்களாகவும் மாற்றப்பட்டன. ‘நல்லதம்பி’, ‘வேலைக் காரி’, ‘ஓர் இரவு’, ‘சொர்க்க வாசல்’ போன்ற படங்களுக்குக் கதை, திரைக்கதை, வசனம் எழுதி, தமிழ்த் திரையுலகிலும் பகுத்தறிவுப் புயலைப் பாய்ச்சியவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா.

‘ரங்கோன் ராதா’, ‘தசாவதாரம்’, ‘என் வாழ்வு’, ‘குமரிக்கோட்டம்’, ‘மக்கள் தீர்ப்பு’, ‘வண்டிக்காரன் மகன்’, ‘கடைசிக் களவு’, ‘கலிங்கராணி’, ‘பார்வதி பி.ஏ’., போன்ற நாவல்களையும் எழுதியுள்ளார். சிறுகதைகள், நெடுங் கதைகள், கவிதைகள் எனப் பல வடிவங்களிலும் அவருடைய எழுத்துகள் நீண்டன. நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், இருபதுக்கும் மேற்பட்ட கவிதைகள், 60-க்கும் மேற்பட்ட நாடகங்கள், 290 தம்பிக்குக் கடிதங்கள், 500-க்கும் அதிகமான தலையங்கங்கள் எனப் பல வகையான படைப்புகளைத் தமிழ்ச் சமூகத்துக்கு ஒப்பளித்துவிட்டுச் சென்றவர் அண்ணா. இவை அனைத்துமே ‘சாதி ஒழிப்பு’, ‘பெண்ணுரிமை’, ‘மூடநம்பிக்கை எதிர்ப்பு’, ‘தமிழர் உரிமை’ போன்ற திராவிட இயக்கக் கொள்கைகளை அடிப் படையாகக் கொண்டவை.

**திரையிலும் இணையத்திலும் வைரலாகிவிட்டால் தலைவராகிவிடலாம் என்ற காலச்சூழலில், இணையம் என்ற வார்த்தைகூட இல்லாத அந்த காலகட்டத்திலேயே தமிழ் மக்களின் இதயத்தில் இடம்பிடித்தவர் அண்ணா.**

‘திராவிட நாடு’, ‘விடுதலை’ போன்ற பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகள், தலையங்கங்கள், தொடர்கள் தமிழ்நாட்டின் அரசியல் - சமூக விவாதங்களை வடிவமைத்தன. படிப்பறிவற்ற பாமர மக்களும் படிக்கத் தெரிந்தவர்களை வாசிக்கச் சொல்லி, அண்ணாவின் எழுத்துகளை உள்வாங்கும் வழக்கம் உருவானது. அண்ணாவின் இலக்கியப் பணிகள், திராவிட இயக்கத்தின் கருத்தியல் அடித்தளத்தை உருவாக்கியதோடு, தமிழ் இலக்கியத்தில் ஒரு புதிய உரைநடை மரபையும் உருவாக்கியது. அந்த மரபு, அடித்தட்டு மக்களின் அரசியலைப் பேசியது. அண்ணாவின் அடியொற்றி, அந்த மரபில் பெரும் படைவரிசையே உருவானது.

அத்தகையப் பெருமைக்குரிய அண்ணாவின் இலக்கியப் படைப்புகளின் சிந்தனைகள், கருத்துகள் யாவும் இன்றையக் காலச்சூழலுக்கும் பொருத்தமானதும் தேவையானதும்கூட. அவற்றை மீளாய்வு செய்யும் முயற்சியே இந்தப் புதிய தொடர். இலக்கியங்கள் வழியாக அண்ணா முன்னெடுத்த இயக்கத்தை ஆராய்வோம், அடுத்தடுத்த வாரங்களில்...

...தொடரும்

**ரா.பிரகாசு**

# தெரிந்து கொள்வோம்

**1956**

**தேவிகுளம், பீர்மேடு தமிழருக்கே!**

மாநில எல்லைப் பிரிவினையின்போது.. தேவிகுளம், பீர்மேடு முதலிய ஊர்கள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்படாதது மட்டுமின்றி, செங்கோட்டை வட்டத்தில் ஒரு பகுதியைக் கேரளத்திற்குத் தருவதென நேரு செய்த முடிவை எதிர்த்து, தமிழ்நாடெங்கும் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அனைத்துக் கட்சிகள் சார்பில், போராட்டக் குழுத் தலைவராக ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் சர் பி.டி.இராசன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900